**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**சுருக்கு முறை வழக்கு எண். 248/2024.**
**வழக்கு சாட்சி – அ.சா. 2 (பட்டியல் சாட்சி –2 ).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. முருகன். | ஜாதி | |
| தந்தை பெயர் | சின்னச்சாமி | தொழில் | கிராம உதவியாளர் (பணி ஓய்வு). |
| கிராமம் | பி.சி. பட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 62/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.07.2026.

**(2, 3, 5, 8, 9, 12 ஆகிய எதிரிகள் ஆஜர். 1, 4, 6, 7, 10, 11 ஆகிய எதிரிகள் ஆஜரில்லை. அவர்களுக்காக பிரிவு 355 B.N.S.S. –ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**அரசுத் தரப்பு முதல் விசாரணை:–**

நான் தற்போது, பி.சி. பட்டியில் குடியிருந்துகொண்டு, கிராம உதவியாளராகப் பணிபுரிந்து, ஓய்வு பெற்றுவிட்டேன். அ.சா.1 கிராம நிர்வாக அலுவலர் ஆவார். 1–வது எதிரியைத் தெரியும். மற்ற எதிரிகள் கூட்டத்தில் இருந்தார்கள். தனித்தனியாக அடையாளம் காணமுடியவில்லை. கடந்த 23.10.2023 ஆம் தேதியன்று, தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு முன்பாக பகல் 11.30 மணியளவில் சில்லமரத்துப் பட்டியில் உள்ள அரசுப் பள்ளி மாணவிக்க ஏற்பட்ட தீண்டாமை வன்கொடுமை சம்பந்தமாக சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள்மீது நடவடிக்கை எடுக்கக்கோரி தமிழரசனுடன் சேர்ந்த சுமார் 12 நபர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அது சம்பந்தமாக அ.சா.1 புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

(1) பொதுவாக, நான் எத்தனை மணிக்கு அலுவலத்திற்கு வருவேன்

என்றால், 09.00 மணி முதல் 10.00 மணிக்குள் வருவேன். V.A.O. கொடுத்த புகாரில் நான் சாட்சிக் கையொப்பம் செய்துள்ளேனா? என்றால், செய்துள்ளேன். அன்றைய தினம் நான் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு யார் மூலம், எதில் சென்றேன் என்றால், V.A.O. உடன் இருசக்கர வாகனத்தில் சென்றேன். நாங்கள் S.P. அலுவலகம் கடந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்றுவிட்டோம் என்றால், சரிதான். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் எதிரிகள் இல்லை என்றால், சரியல்ல. கூட்டமாக இருந்தார்கள். கூட்டமாக இருந்தவர்கள் பெயர் மற்றும் விவரம் தெரியாது என்றால், சரிதான்.

(2) நான் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செல்லும்போது எத்தனை மணியிருக்கும் என்றால், 10.30 மணி இருக்கும். ஒவ்வொரு வாரம் திங்கட்கிழமை மனு வாங்கப்படும் என்றால், சரிதான். அன்றைய தினம் மனுநாள் என்றால், சரிதான். அன்றைய தினம் S.P. அலுவலகத்திலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் மக்கள் கூட்டம் இருக்கும் என்றால், சரிதான். கூட்டமாக இருந்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள் என்ற விவரத்தை நான் போலீசார் விவரத்தைச் சொல்லியுள்ளேன். ஆர்ப்பாட்டம் செய்ததாக நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றாலும், நான் போலீசார் கேட்டுக் கொண்டதால், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் காவல் நிலையம் செல்லும்போது சுமார் 12.00 மணியிருக்கும். புகாரை யார் எழுதினார்கள் என்றால், V.A.O. தட்டச்சு செய்துகொண்டுவந்ததை காவல் நிலையத்தில் கொடுத்தோம். V.A.O. புகாரை எங்கு வைத்து தட்டச்சு செய்தார் என்றால், அது பற்றித் தெரியவில்லை.

(3) அன்றைய தேதியில் நானோ, V.A.O.–வோ மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் செல்லவில்லை என்றால், சரியல்ல. புகார் மனு கொடுக்க வந்தவர்களை போலீசார் தடுத்து நிறுத்தி, பின்னிட்டு புகார் எங்களிடம் பெற்றுள்ளனர் என்றால், சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால், சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை எத்தனை நாட்கள் கழித்து விசாரித்தார்கள் என்றால், புகார் கொடுத்த அன்றே, சுமார் 01.00 மணியளவில் விசாரித்தார்கள். என்னைப் போலீசார்

விசாரிக்கவில்லை என்றாலும், V.A.O. புகார் கொடுத்ததால், நான் அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.07.21 18:53:17 +0530

**நீதித்துறை நடுவர்,**
**தேனி.**